IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No. 107/2017

சாட்சி : PW1

பெயர் : தனம் தேதி: 16-10-2023

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>

சொத்துக்கள் செல்லமுத்து என்பவருக்கு விற்பனை செய்தோம். இரண்டு பவர் எழுதிக்கொடுத்தோம். அதில் என் சொத்திற்கு நான் கையெழுத்து போட்டேன். அந்த பவர் பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அது வா.த.சா.ஆ-A7 மற்றும் வா.த.சா.ஆ-A8 ஆக குறியிடு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நான் தனியாக என் சொத்திற்கு பவர் எழுதிக்கொடுத்தேன். அதை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. விற்பனை செய்த பணம் என்று வந்தது என்று நியாபகம் இல்லை. விற்பனை செய்த பணத்தை வைத்து 10 நாளில் நிலம் வாங்கினேன். அங்கு ஒரு வாரத்தில் குடிபோனோம் என்றால் ஆமாம். அந்த விவரத்தை வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன். என்னுடைய பெயரில் உள்ள சொத்தில் என்னுடைய மக்களுக்கு பாகம் இல்லை. மகன்கள் ஈஸ்வரன், கோவிந்தராஜன் அசல் வழக்கு எண். 36/2021ல் பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ஆமாம். அந்த வழக்கில் பதில் போட்டுள்ளோம். இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி என்னுடைய கணவர் என்றால் ஆமாம். என் மகன்கள் தாக்கல் செய்த வழக்கில் சொத்துக்கள் பொது குடும்ப சொத்துக்கள் அல்ல என்று நான் கட்சி நடத்தி வருகிறேன் என்றால் ஆமாம். 2008ம் வருடம் சொத்து வாங்கிய விவரம் தெரியும் என்றால் ஆமாம். அசல் வழக்கு எண். 36/2021ல் 4ம் பிரதிவாதியாகிய நான் என்னுடைய பதிலுரையில் என்னுடைய கணவர் மீது கொண்ட

அன்பாலும், நம்பிக்கையாலும் கிரய ஆவணத்தை 1ம் பிரதிவாதி பெயரிலேயே கடந்த 09.07.2008 அன்று ஏற்படுத்திக்கொண்டார்கள் என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். அப்போது அந்த காடு வாங்கிய விவரம் தெரியும் என்றால் ஆமாம். 18.08.2008 லிருந்து 22.04.2015 வரை 89 கிரையங்கள் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் அதற்கு கூடுதலாகவும் செய்து கொடுத்திருப்பார்கள். அந்த கிரய ஆவணங்களில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் ஆமாம். என்னுடைய அதிகாரம் பெற்ற முகவர் என்ற முறையில் ஒவ்வொரு கிரய ஆவணம் பதிவு செய்த பிறகும், அதற்கான தொகையை என்னிடம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ–A7 மற்றும் வா.த.சா.ஆ–A8 பவரில் கண்ட வாசகங்கள் சரியானவை தான் என்றால் ஆமாம். அந்த சொத்துக்கள் மேடு பள்ளமாக இருந்தது என்றால் ஆமாம். அவைகளை சரி செய்து வீட்டு மனைகளாக விற்பனை செய்ய நான் எழுதிக்கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் என்னுடைய சுயராஜ்ஜித சொத்துக்கள் என்று பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. கயிறு வியாபாரம் என் கணவர் தான் செய்து வந்தார் என்றும், நான் கயிறு வியாபாரம் செய்து வந்ததாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் செய்து வந்த கயிறு வியாபாரத்தை நான் செய்து வந்ததாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் பெற்றோர்கள் எனக்கு சொத்து கொடுத்தார்கள். அந்த சொத்தை 01.12.2009 ம் வருடம் விற்பனை செய்துவிட்டேன் என்றால் ஆமாம். தற்போது சாட்சி தாய், தகப்பனார் நிலம் கொடுக்கவில்லை என்று கூறுகிறார். என் தகப்பனார் மற்றும் சகோதரர்கள் பள்ளிக்கொண்டாம் பாறை, பாப்பாத்தி காட்டில் வசித்து வந்தார்கள் என்றால் ஆமாம். சுமதி என்பவரை எனக்கு தெரியாது. 01.12.2009 தேதியில் நான், என்னுடைய சகோதர,

சகோதரிகள் குடும்ப சொத்தை சுமதிக்கு ரூ. 3,78,100/—க்கு கிரயம் செய்து கொடுத்தோம் என்றால் ஆமாம். என் பெற்றோர்கள் எனக்கு பணம் கொடுத்து நான் நிலம் வாங்கியதாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. மாரியம்மாளை எனக்கு தெரியாது. புஷ்பாவை தெரியாது. அவர்கள் இருவரும் என் சகோதரிகள் என்று சொன்னால் சரியல்ல. சொத்துக்களை கிரயம் பெற்ற தொகை முழுவதும் என் கணவர் சம்பாதித்த தொகை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு கால தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், அதனால் தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதியின் கணவர் என்னுடைய தம்பி என்றால் ஆமாம். எனவே தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ஓம்/— A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.